# 2013 ஆம் ஆண்டுக்கான

# பொதுத் திறைசேரியின்

# அரசிறைக் கொள்கைகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை

# உள்ளடக்கம்

**பக்கம்**


| | |
|---|---|
| 1. தொலைநோக்கும் பணித்திட்டக் கூற்றும் | 3 |
| 2. பணிகள் | 4 |
| 3. அரசிறைக் கொள்கைச் செயற்பாடு - 2013 | 5 |
| 4. 2013 ஆம் ஆண்டின் செயலாற்றுகை | 15 |
| 5. நிர்வாகமும் கணக்குகளும் | 23 |

# தொலை நோக்கு

நிலைபேறான அரசிறைக் கொள்கையொன்று வகுத்தமைக்கப்படுவதை உறுதி செய்தல்

# பணிக்கூற்று

அரசின் அகல் விரிவான அபிவிருத்திச் செயற்பாட்டு வரையறையினுள் அரசிறைக் கொள்கையை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்

# பணிகள்

- தனிப்பட்ட, அரசாங்க மற்றும் சர்வதேச பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து நடுத்தர கால வரவு செலவுத் திட்ட சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கையை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்.

- வரிக்கொள்கை மற்றும் அதனோடு தொடர்பான பிற சட்ட ஏற்பாடுகளை தயாரித்தல். (சுங்கத்தீர்வை மற்றும் பிற விசேட பொருட்களுக்கான வரி நீங்கலாக)

- அரசாங்க வருமானம் மற்றும் பெறுகை உள்ளடங்கலாக அரசிறை எண்ணக்கருக்கள் மற்றும் அரசிறைச் செயற்பாடுகளினை முகாமை செய்தலும் விதப்புரை செய்தலும்.

- அனைத்து அறிக்கையிடல்களும் உள்ளடங்கியதாக அரசிறை முகாமைத்துவப் பொறுப்புச் சட்டத்தினை செயற்படுத்துதல்.

## 1.அரசிறைக் கொள்கையின் செயலாற்றுகை – 2013

தேசிய வரவு செலவுத்திட்டத்துடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த அரசிறை முகாமைத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு நடுத்தரகால அரசிறை முகாமைத்துவ வேலைச்சட்டகத்துக்குள் அரசிறை வளர்ச்சியினை நோக்கி எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கைகள் 2013 இல் நான்காவது வருடமாகவும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை வீழ்ச்சியடையச்செய்தன. 2009 இல் மொ.உ. உற்பத்தியில் 9.9 சதவீதம், 2010 இல் 8.0 சதவீதம், 2011 இல் 6.9 சதவீதம், 2012 இல் 6.5 சதவீதம் மற்றும் 2013 இல் 5.9 சதவீதமாக பற்றாக்குறை தொடர்ந்தும் வீழ்ச்சிப்போக்கில் காணப்பட்டது. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையில் படிப்படியான வீழ்ச்சி அரசாங்க வருமானத்திற்கேற்ப அரசாங்க செலவினத்தினை தொடர்ந்தும் பேணியதனால் ஏற்பட்டதாகும். இதற்கமைவாக, அரசாங்க வருமானம் 2009 இல் ரூபா 699.6 பில்லியனிலிருந்து 2013 இல் ரூபா 1,137.4 பில்லியனாக அதிகரித்துள்ள அதேவேளை, அரசாங்கத்தின் செலவினம் ரூபா 1,202 பில்லியனிலிருந்து ரூபா 1,669.4 பில்லியனாக அதிகரித்தது. சராசரியாக சாதாரண வருமான வளர்ச்சி 2009 இல் 11.8 சதவீதமாகக் காணப்பட்டதுடன், அரசாங்க செலவினம் 11.0 சதவீதமாக 2 செலவினங்களும் மொ.உ. உற்பத்தி வளர்ச்சியில் சாதாரண வளர்ச்சியிளை விட அதிகமாகக் காணப்பட்டன. இச்சாதன நிலமை அரசிறை சமமின்மையினை குறைக்கும் அதேவேளை. அரசாங்க வருமான வளர்ச்சி மொ.உ.உ. வளர்ச்சியில் பின்னடைந்து காணப்பட்டதுடன், மொ.உ. உற்பத்தியில் வருமானம் உயர்ந்த அரசாங்க முதலீடுகளை அடையும் வகையில் 5.5 சதவீதமாகக் காணப்பட்டது. இக்கேள்வி அதிகரிப்பானது, அரசாங்க முதலீட்டில் படுகடன் நிதியினை குறைப்பதற்கான முயற்சியினை உறுதிப்படுத்தியது. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சிக்கு அடுத்தபடியாக வரவு செலவுத்திட்டத்தின் வருமானம் மற்றும் மீண்டெழும் செலவின செயலாற்றுகை ரூபா 67.7 பில்லியன் வருமான பற்றாக்குறையினை காட்டியதுடன், ஆரம்ப பற்றாக்குறையாக ரூபா 72.1 பில்லியன் காணப்பட்டது. இரண்டு பற்றாக்குறைகளும் 2013 ஆம் ஆண்டில் ஆகக் குறைந்த பெறுமதியான மொ.உ. உற்பத்தியில் 0.8 சதவீதமாகக் காணப்பட்டன.

2013 இல் பொதுவான அரசிறை தொழிற்பாடுகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டன. சுங்கத்தினை அடிப்படையாகக் கொண்ட வரிகள், குறைந்த கட்டணங்களை நோக்கிய தொடர்ந்தேர்ச்சியான மாற்றங்களும் திருத்தங்களும், பரந்தளவிலான வரிக்கொள்கை மற்றும் துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் சேவைத்துறையில் கவனமெடுக்க வேண்டிய நிருவாகத்தில் காணப்படும் சவால்கள் என்பவற்றினால் வருமானத்தினை குறைவடையச்செய்யும் விடயங்களினால் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் சமமற்ற நிலமை காணப்பட்டது. படுகடன் சேவைகள் அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்ட செலவினம், பதிய வருடத்தில் சம்பள அதிகரிப்பு மற்றும் சம்பள திருத்தங்கள் காரணமாக முதல் 4 மாதங்களில் அதிகரித்த ஆளுக்குரிய வேதனாதிகள் என்பவற்றினால் செலவினமானது அதிகரித்தது. எவ்வாறாயினும், இந்நிலமையானது வருமான அதிகரிப்பு மற்றும் அரசாங்க செலவின முகாமைத்துவதத்தில் ஏற்பட்ட மேலதிக முன்னேற்றம் என்பவற்றினால் வருடத்தின் இரண்டாவது அரைவாசி கட்டுப்படுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் வருமான செயலாற்றுகை இலக்கிடப்பட்ட தொகையான ரூபா 1,257.6 பில்லியனை விட குறைவாகக் காணப்பட்டது என்ற வகையில் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகளின் மந்த நிலை என்பன கடந்த வருடம் தொடர்ந்தும் காணப்பட்டதனால் 2013 இன் முதல் அரையாண்டில் உற்பத்தியினை ஊக்குவிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட துறைகளுக்கு வழங்கப்பட்ட விளக்களிப்புகள் மற்றும் சலுகைகளை வழங்கியதனால் ஏற்பட்ட தாக்கம் இதற்கு காரணமாக அமைந்தது. குறித்த வருடத்தின் முதல் அரையாண்டின்போது வீழ்ச்சியடைந்த வருமான சேகரிப்பானது மாற்றமடைந்ததுடன், வருடத்தின் இறுதியில் சாதகமான வளர்ச்சியொன்றினை பதிவாக்கியிருந்தது. துறைமுகங்கள் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட, பொருளாதார சேவைக் கட்டணம் என்பன 2013

இன் வரி வருமான வளர்ச்சியினை 10.7 சதவீதமாக அடைந்து கொள்வதற்கு உதவியதுடன், அனைத்து வரிகளிலிருந்தும் சாதகமான பங்களிப்பு கிடைத்தது. இந்நிலமை 2011 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வரி விதிப்பனவின் கீழ் ஏற்பட்ட அபிவிருத்தியாகும். மொ.உ. உற்பத்தியில் வரி வருமான சதவீதமாக 2012 இல் காணப்பட்ட 12.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013 இல் 11.6 சதவீதமாகக் காணப்பட்டது.

2013 இல் வருமான செயலாற்றுகையானது குறிப்பாக குறித்த வருடத்தின் இரண்டாவது அரையாண்டின்போது, குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பரந்த அடிப்படை மற்றும் குறைந்த வரி வீதங்களை இலக்காகக் கொண்ட புதிய வரி மறுசீரமைப்புகளின் தாக்கத்தினால் சாதகமான வளர்ச்சிபோக்கு அவதானிக்கப்பட்டது. வருமான வரியில் செயலாற்றுகையானது குறிப்பிடத்தக்களவு ஊக்குவிப்பாக காணப்படுவதுடன், பெ.சே வரி மற்றும் தேசக் கட்டுமான வரி வருமானங்கள் அவற்றினது அடிப்படைகளை விரிவுப்படுத்தும் வகையில் படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது. குறைந்த செயலாற்றுகையானது இறக்குமதிகளை அடிப்படையாகக் கொண்ட வரிகளில் உள்நாட்டு வரிகளிலிருந்து வருமானத்தை அதிகரிப்பதற்கான உறுதியான முயற்சிகள் எடுக்கப்படவேண்டிய தேவையினை எடுத்துக்காட்டுவதுடன், சேவைத்துறைகளில் வரி விதிப்பனவானது சர்வதேச வர்த்தகம் தொடர்பான வரிகளுக்கும் எதிர்கால அறிவுறுத்தலை வழங்கியுள்ளதுடன், குறைந்த இறக்குமதி மற்றும் உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகளின் அதிகரிப்பு என்பவற்றினால் இவை அதிகரித்துள்ளன.

அதேவேளை, மொத்த உள்நாட்டு படுகடன் இருப்பில் குறுகிய கால படுகடன் பங்கினைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த சந்தை வட்டி வீதங்கள் காணப்பட்டமை அரசாங்கத்தின் வட்டிச் செலவினத்தினை 2012 இல் ரூபா 408 பில்லியனிலிருந்து ரூபா 444 பில்லியனாக 8.7 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரிக்குமளவு பேணுவதற்கு உதவியாக இருந்தது. எவ்வாறாயினும் மொ.உ. உற்பத்தியில் வட்டியல்லாத நடைமுறைச் செலவினங்கள் 2012 இல் 9.5 சதவீதத்திலிருந்து 2013 இல் 8.8 சதவீதமாக காணப்பட்டமையும் தேசிய பாதுகாப்பு மீதான செலவினம் மேலும் குறைவடைந்தததனால் 2009 இல் மொ.உ. உற்பததியில் 3.9 சதவீதத்திலிருந்து 2013 .ல் 2.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை, ஏனைய பொருட்கள், சேவைகள் மீதான செலவினமும் நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலை காரணமாக முன்னைய வருடத்தில் காணப்பட்ட ரூபா 140 பில்லியனிலிருந்து (மொ.உ.உ. 1.8 சதவீதம்) ரூபா 119.4 பில்லியனாக(மொ.உ.உ இல் 1.4 சதவீதமாக) வீழ்ச்சியடைந்தது. இது மீண்டெழும் செலவினத்தினை முன்னைய வருடத்தில் காணப்பட்ட 14.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013 இல் மொ.உ.உற்பத்தியில் 13.9 சதவீதமாக பேணுவதற்கு முடிந்தது. வருமானப் பற்றாக்குறையானது, 2012 இல் காணப்பட்ட 1.0 சதவீதத்திற்கு எதிராக 2013 இல் மொ.உ உற்பத்தியில் 0.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன், அரசாங்க முதலீட்டினை ரூபா 481.2 பில்லியனாக (மொ.உ.உ. 5.5 சதவீதம்) பில்லியனாக காணப்பட்டதுடன் இது 2013 இல் குறித்த வருடத்திற்கான திட்டமிடப்பட்ட பற்றாக்குறை என்ற வகையில் ரூபா 529.3 பில்லியனை (மொ.உ.உ 6.1 சதவீதம்) இலக்காகக் கொண்டிருந்தது.

நடைமுறைச் செலவினை குறைப்பதற்கு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் கடந்த காலங்களில் அனுபவிக்கப்பட்ட வருமானப் பற்றாக்குறையினை நீக்குவதற்கு அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடத்தக்களவு இடத்தினை வழங்கியுள்ளது. இது அரசிறை செயற்பாடுகளின் மீதான குறைந்த அலுத்தத்தினை ஏற்படுத்துவதுடன், குறிப்பாக 2011 இல் வரி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட நிலமையாகும்.

பேரண்டப் பொருளாதார நோக்கில் பல்வேறுபட்ட சமமின்மைகளுடன் செயற்படுவதற்கு இவ்வருடத்தில் பல்வேறுபட்ட கொள்கை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை என்பவற்றுடன் இணைந்து உயர்ந்த சர்வதேச எண்ணய் விலைகள், விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டினைத் திருத்துதல் மற்றும் உள்நாட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி

மூலங்களை மேம்படுத்துவதற்கு இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட செஸ் வரித் திருத்தம் என்பன பாரிய நிதிப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்குக் காரணமாக இருந்தது. குறித்த ஆண்டின் போது வன் மதுபானம் மற்றும் பாகு மதுபானம் என்பவற்றின் மீதான உற்பத்தித் தீர்வை அதேபோன்று சிகரெட்டுக்கள் மீதான மதுவரி என்பனவும் இவ்வரி வருமானத்தினை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தன. இதற்கு மேலதிகமாக சத்தியக் கடதாசிகள் மீதான முத்திரைத் தீர்வை குறைக்கப்பட்டதுடன் முறியிடப்பட்ட பிரதேசம் மற்றும் சுதந்திரத் துறைமுக பிரதேசமாக இனங்காணப்பட்ட பிரதேசங்களையும் இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்படும் ஏற்றுமதியினை அதிகரிப்பதற்கான வியாபாரச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கும் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதிச் சட்டம் - வர்த்தக மைய ஒழுங்கு விதியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது.

நடைமுறைச் செலவினம் 2012 உடன் ஒப்பிடுகையில் 2013 இல் ரூபா 1,205 பில்லியனாக 6.6 சதவீதத்தினால் அதிகரித்தது. வட்டிச் செலவினம் 2012 இல் காணப்பட்ட ரூபா 408 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மொத்த நடைமுறைச் செலவினத்தின் 37 சதவீதமாக ரூபா 444 பில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் மெ.உ.உ இல் சதவீதமாக முன்னைய வருடத்தில் காணப்பட்ட 5.4 சதவீதத்திலிருந்து 5.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. வட்டிக் கொடுப்பனவுகளில் அதிகரிப்பு உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகளில் 21.6 சதவீதத்தினால் அதிகரித்ததுடன், வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 34.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மொத்த வட்டிக் கொடுப்பனவில் ரூபா 365 பில்லியன் உள்நாட்டு வட்டிக் கணக்காகக் காணப்பட்டதுடன் இது மூன்றாவது மீண்டெழும் செலவினமாகக் காணப்பட்டது.

வட்டியல்லாத நடைமுறைச் செலவினம் 2012 இல் ரூபா 723 பில்லியனாகக் காணப்பட்டதுடன் குறித்த ஆண்டில் ரூபா 761 பில்லியனாக அதிகரித்தமை 5.3 சதவீத அதிகரிப்பு என்பதுடன் மொ.உ. உற்பத்தியில் இது 8.8 சதவீதமாகும். சம்பளச் செலவினமானது ரூபா 348 பில்லியனிலிருந்து ரூபா 393 பில்லியனாக 13.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கான பிரதான காரணம் சம்பள அதிகரிப்புகளும் அரசாங்க சேவையில் காணப்பட்ட வெற்றிடங்களை மேலும் பூரணப்படுத்தியதாகும். ஏனைய பொருட்கள் சேவைகள் மீதான பாதுகாப்பு தொடர்பான செலவினங்கள் 2012 இல் 32.6 பில்லியனிலிருந்து 2013 இல் 22.2 பில்லியனாக வீழ்ச்சியடைந்தமை நடைமுறைச் செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியது. இதன் விளைவாக இளைப்பாறிய ஓய்வூதியம் பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட மாதமொன்றுக்கான கொடுப்பனவு ரூபா 500 ஆக அதிகரித்ததுடன், 2012 இன் புதிதாக இளைப்பாறிய 16,794 பேர் ஏற்படுத்திய முழுமையான தாக்கம் அத்துடன், 2013 இல் இளைப்பாறிய ஏறக்குறைய 22,111 பேரின் பகுதியளவிலான தாக்கம்ள என்பன 2013 இல் அரசாங்கத்தின். ஓய்வூதியத் செலவினத்தினை ரூபா 123 பில்லியனாக 10.4 சதவீத்தினால் அதிகரிக்கச் செய்தது.

அதேவேளை, சமூக நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம் 2013 இல் ரூபா 52.3 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இவற்றுள் 16.2 பில்லியன் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கும் ரூபா 15.3 பில்லியன் சமுர்த்தி காசு மானியங்களுக்காகவும் ரூபா 7.7 பிலிலியன் இலவச பாடசாலை சீருடைகள், பாடப்புத்தகங்கள் மற்றும் போ'ாக்கு நிகழ்ச்சித்திட்டங்களுக்காவும் ரூபா 7.23 பில்லியன் வறிய மக்களுக்காகவும் ஏனைய நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்காவும் வழங்கப்பட்டன. அதேவேளை, அரசாங்க நிறுவனங்களுக்கான மாற்றல்கள் ரூபா 39.4 பில்லியனாக காணப்பட்டதுடன், ஆளுக்குரிய வேதனாதிகளும் அதிகரித்ததுடன் இலங்கை புகையிரதம், தபால் நிணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை என்பவற்றின் தொழிற்பாட்டு நட்டங்களை ஈடுசெய்வதற்காக ரூபா 15.6 பில்லியனும் மாற்றப்பட்டன. இதனால் மொ.உ. உற்பத்தியில் சதவீதமாக நடைமுறைச் செலவினம் முன்னைய வருடத்தில் காணப்பட்ட 14.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013 இல் 13.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இது அரசிறை அபிவிருத்திச் செயன்முறையினை

உறுதிப்படுத்துவதற்கு செலவினத்தினை குறைப்பதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முயற்சியின் விளைவாக மொ.உ. உற்பத்தியில் சாதாரண வளர்ச்சியினைவிட குறைவான வளர்ச்சியினை பிரதிபலித்தது.

பொருளாதாரத்தில் மூலப்பொருளினை மையப்படுத்திய பொருளாதாரத்தினை நாட்டில் ஏற்படுத்தும் நோக்கத்துடன் அரசாங்கம் பொருளாதார சமூக உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதில் மிகவும் கரிசனையுடன் செயற்படுத்தி வருகின்றது. இந்த வகையில் அரசாங்கம் 2012 இல் செலவிட்ட ரூபா 444 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 இல் அரசாங்க முதலீட்டுக்கான செலவினமாக ரூபா 481 பில்லியனை செலவிட்டுள்ளது. இது முன்னைய வருடத்தில் காணப்பட்ட 5.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ. உற்பத்தியில் 5.5 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை, வருடாந்த அரசாங்க முதலீட்டினை மொ.உ. உற்பத்தியில் ஏறக்குறைய 6.0 சதவீதமாக பேணுவதற்கும் முடியுமாக இருந்தது.

2005 இலிருந்து 2013 வரைக்குமான காலப்பகுதியில் சராசரி அரசாங்க முதலீடு மொ.உ. உற்பத்தியில் 6.2 சதவீதமாகக் காணப்பட்டது. மின் உற்பத்தி, துறைமுகங்கள், விமான நிலையங்கள், அதிவேகப் பாதைகள், புகையிரதம், தேசிய நீர்ப்பாசன முறைமை, நீர் வழங்கள் மற்றும் துப்பரவேற்பாடு, பாடசாலைகள், வாழ்க்கை தொழிற்பயிற்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வைத்தியசாலைகள் மற்றும் சேவை வழங்கல் வசதிகள் என்பன 2013 இல் விரிவாக்கப்படும் வகையில் முன்னேற்றமடைந்தன. அரசாங்க முதலீடு மீதான நிலையான செலவினம் நாட்டின் ஆற்றலினை மேம்படுத்துவதற்கு உதவுவதுடன், அதன் மூலம் நன்மையடையக்கூடிய வகையில் உதவுவதற்கும் எதிர்காலத்தில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினை பெற்றுக்கொள்வதற்கும் முடியுமாக உள்ளது. அரசாங்க முதலீட்டுச் செலவினம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதன் விளைவாக நாட்டின் மின் உற்பத்தி திறன் 2002 இல் 2,231 மெகாவோட்டிலிருந்து 2013 இல் 3,371 மெகா வோட்டாக அதிகரித்ததுடன், துறைமுகங்களின் கொள்ளளவு 2002 இல் 28.4 மில்லியன் மெ. தொன்களிலிருந்து 2013 இல் 66.3 மில்லியன் மெ. தொன்களாக அதிகரித்தது. பாதை அடர்த்தி 2002 இல் 1.68 சதுரக் கி.மீற்றர்களிலிருந்து 2013 இல் 1.76 சதுர கிலோமீற்றர்களாக அதிகரித்ததுடன் நீர் உற்பத்திக் கொள்ளளவு 2005 இல் 350 மில்லியன் கன மீற்றர்களிலிருந்து 2013 547 மில்லியன் கன மீற்றர்களாக அதிகரித்துள்ளன. இந்த அரசாங்க முதலீட்டு அதிகரிப்பானது மின்சாரத்திற்கான மக்கள் அடைவினை 96 சதவீதமாகவும், பாதுகாப்பான குடிநீர் 88.7 சதவீதமாகவும் போக்குவரத்திற்கான அடைவு, கல்வி சுகாதார வசதிகள் மேலும் அதிகரித்தன. பொதுக் கல்வித்துறையின் தேறிய ஆட்சேர்ப்பு விகிதம் 2002 இல் 97.2 சதவீதத்திலிருந்து 2012 இல் 98.4 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. பொது சுகாதார வசதிகள் 2004 இல் 3.1 இலிருந்து 3.6 ஆக அதிகரித்ததுடன், வைத்தியர் ஒருவருக்கான நோயாளிகள் 2,224 இலிருந்து 1,167 ஆகவும் தாதியர் (10,000 நோயாளிகளுக்கு) 2004 இல் 8.9 இலிருந்து 15.1 ஆகவும் முன்னேற்றமடைந்தது. இந்த உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 2002 இல் வறுமை உழிப்பானது 22.7 சதவீதத்திலிருந்து 6.7 சதவீதமாக குறைக்கப்பட்டது.

மத்தல ராஜபகஷ சர்வதேச விமான நிலையம், கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் கொம்பு-கட்டுநாயக்க அதிவேகப் பாதை என்பவற்றின் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டமை, 2013 இல் அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் மிக முக்கிய விடயங்களாகக் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, கொடகம-பின்னதுவ தெற்கு அதிவேகப் பாதைக் கருத்திட்டத்தின் ஒரு பகுதி, கொழும்பு வெளிச்சுற்றுவட்ட பெருந்தெரு கருத்திட்டத்தின் கொட்டாவ-கடுவெல பாதை என்பன 2014 மார்ச்சில் திறக்கப்பட்டன. மஹிந்த ராஜபக‘ துறைமுகத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டத்தின் கட்டம் 11, நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம், வடக்கு புகையிரதப் பாதைக் கருத்திட்டம், கொழும்பு தெற்கு துறைமுக கருத்திட்டம் மற்றும் கொழும்பு வெளிச்சுற்று பாதைக் கருத்திட்டம் என்பன தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அவற்றினை வளர்ச்சி மையங்களாகவும் நகர வீடமைப்பு, நீர், துப்பரவேற்பாடு, சந்தைகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளைக்

கொண்டதாக அபிவிருத்தி செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பிரதேசத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தின் கிராமிய, நகர அபிவிருத்தி முன்னெடுப்புகளின் பகுதியாகவும் பிராந்தியங்களுக்கிடையில் பொருளாதார முரண்பாடுகளைக் குறைப்பதற்கும். பாதைகளை அபிவிருத்தி செய்தல், மின்சாரப் பகிர்வு வலையமைப்பு, சமுதாய நீர் வழங்கல் மற்றும் சிறிய நீரப்பாசன கருத்திட்டங்கள், கிராமிய பிரதேசங்களில் சந்தை வசதிகளை ஏற்படுத்தல் என்பன தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த கிராமிய மைய அபிவிருத்தி உபாயமானது, 2013 இல் வறுமையினை 6.5 சதவீதமாகவும், பல்வகைப்பட்ட வறுமையினை 1.9 சதவீதமாக குறைத்தல் மற்றும் வேலையின்மையினை 4.4 சதவீதமாகவும் குறைப்பதற்கு உதவியது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பு மற்றும் மீள் கட்டுமானம் தொடர்பான பணிகள் இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்று உற்பத்திறன்மிக்க பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதனை உறுதிப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2012 இல் இப் பிரதேசங்களில் பொருளாதார வளர்ச்சி 25 சதவீதமாகக் காணப்பட்டதுடன். இதே காலப்பகுதியில் தேசிய சராசரி வளர்ச்சி 6.3 சதவீதமாகக் காணப்பட்டதுடன், அது 2013 இல் 7.3 சதவீதமாகவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கண்ணிவெடியகற்றல் 90 சதவீதத்திற்கு மேல் இடம்பெற்றுள்ள அதேவேளை, 2000 இற்கு பின்னர் இடம்பெயர்ந்த ஏறக்குறைய 297,000 பேர் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

2013 இல் வருமானப் பற்றாக்குறையானது 2012 இல் காணப்பட்ட ரூபா 79.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மொத்த வருமானம் மொத்த நடைமுறைச் செலவினம் என்பவற்றுக்கிடையில் ரூபா 67.7 பில்லியன் இடைவெளியாகக் காணப்பட்டது. மொ.உ. உற்பத்தியில் சதவீதமாக, வருமானப் பற்றாக்குறையானது முன்னைய வருடத்தில் காணப்பட்ட 1.0 சதவீதத்திலிருந்து 0.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. வருமான பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச் செலவினத்தினை கட்டுப்படுத்துவதற்கு இது உதவியாக இருந்தது. வருமான பற்றாக்குறை மற்றும் அரசாங்க முதலீடு ரூபா 481 பில்லியனாக காணப்பட்டதனால் மொத்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை 2012 489 பில்லியனாகக் காணப்பட்டதுடன், 2013 இல் ரூபா 516 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கு மாற்றமாக, 2009 இல் பதிவாகியிருந்த மிக் கூடிய பற்றாக்குறையான 9.9 சதவீதத்திலிருந்து 4 வது வருடமாக வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை 2012 இல் 6.5 சதவீதத்திலிருந்து மொ.உ. உற்பத்தியில் 5.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு நிதியளிப்பதில் ரூபா 448 பில்லியன்(மொத்த நிதியளிப்பில் 86.8 சதவீதம் அல்லது மொ.உ.உற்பத்தியில் 5.2 சதவீதம்) உள்நாட்டு மூலங்களிலிருந்து தேறிய பெறுகைகளாக பெறப்பட்டுள்ளன. 2012 இல. ரூபா 106 பில்லியனுடன் ஒப்பிடுகையிலதேறிய உள்நாட்டு நிதியளிப்பு ரூபா 55.8 பில்லியன் அரசாங்க பிணையங்களில் வதிவல்லாதவர்களினால் முதலீடு செய்யப்பட்டவை உள்ளடங்களான நிதியளிப்புக் காணப்பட்டது. தேறிய பற்றாக்குறை நிதியள்ப்புக்கான மீதி ரூபா 80 பில்லியன் வெள்நாட்டு மூலங்களினால் நிதியளிக்கப்பட்டது. (மொத்த நிதியளிப்பில் 13.2 சதவீதம் அல்லது மொ.உ.உற்பத்தியில் 0.8 சதவீதம்)

மொத்த தேறிய உள்நாட்டு நிதியளிப்பில், வங்கித்தொழில் முறைமைகளிலிருந்து தேறிய பெறுகைகள் 2012 இல் ரூபா 131.5 பில்லியனிலிருந்து ரூபா 297 பில்லியனாக அதிகரித்தது. தேறிய வங்கி நிதியளிப்பு முன்னைய வருடத்தில் பதிவாகிய 42.7 சதவீதத்துடன் ஒப்பீடுகையில் மொத்த தேறிய உள்நாட்டு நிதியளிப்பில் 66.3 சதவீதமாக காணப்படுகின்றது. இந்த அதிகரிப்பானது, மத்திய வங்கியிலிருந்து வீழ்ச்சியடைந்த ரூபா 164.8 பில்லியனிலிருந்து தேறிய பெறுகைகளாக வர்த்தக வங்கிகளின் தேறிய புதிய பெறுகைகள் ரூபா 461.8 பில்லியனாக காணப்பட்டது. இதில் இலங்கை மத்திய வங்கியினல் வைத்துக்கொள்ளப்பட்ட திறைசேறி முறிகளிலிருந்தும் மத்திய வங்கியின் முற்பணக்கணக்கு

ஏற்பாடுகளிலிருந்தும் கழிப்பனவாகும். வர்த்தன வங்கிகளிலிருந்து பெறுகைகளின் அதிகரிப்பு வர்த்தக வங்கிகளினால் வைத்துக்கொள்ளப்பட்ட திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்களில் ஏற்பட்ட அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். மொ.உ உற்பத்தியின் சதவீதமாக தேறிய வங்கி நிதியளிப்பு 2012 இல் 1.7 சதவீதத்திலிருந்து 2013 இல் 3.4 சதவீதமாக அதிகரித்தது.

வங்கியல்லாத துறைகளிலிருந்து மொத்த தேறிய பெறுகைகள் 2012 இல் ரூபா 71 பில்லியனிலிருந்து ரூபா 95.4 பில்லியனாக அதிகரித்தது. மொத்த உள்நாட்டு நிதியளிப்பின் சதவீதமாக முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2013 இல் 21.3 சதவீதமாகக் காணப்பட்டது. ஊழியர் சேமலாப நிதி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2013 இல் வங்கியல்லாத நிதியளிப்பாக பிரதான பங்களிப்பினை வழங்கியுள்ளன. தேறிய வங்கியல்லாத நிதியளிப்பு மொ.உ. உற்பத்தியில் சதவீதமாக 2012 இல் 0.9 சதவீதத்திலிருந்து 2013 இல் 1.0 சதவீதமாக அதிகரித்தது. உள்நாடடு மூலங்களிலிருந்து பெறுகைகளை அதிகரித்த போதிலும் அரசாங்க் பிணையங்கள் மீதான வட்டி வீதங்கள் உள்நாட்டு நாணயச்சந்தையில் காணப்பட்ட அதிக திரவத்தன்மையின் காரணமாக தொடர்ந்தும் ஸ்திரத்தன்மையுடன் காணப்பட்டது. உள்நாட்டு பெறுகைகளை மேற்கொள்கின்றபோது அரசாங்கம் நடுத்தரத்திலிருந்து நிண்டகால படுகடன் சாதனங்களை நம்பியிருக்க வேண்டியேற்பட்டது. இதில் திறைசேரி முறிகள் உள்ளடங்குவதுடன். 2013 இல் 30 வருடங்களுக்கான திறைசேரி விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

மொத்த அடிப்படையில் மொத்த வெளிநாட்டு கடன் பெறுகைகள் 2013 இல் ரூபா 179.3 பில்லியனாகக் காணப்பட்டதுடன், அரசாங்க முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக பெறப்பட்ட கருத்திட்ட கடன்கள் தொடர்பான செலவினங்களாகக் காணப்பட்டன. வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவுகள் ரூபா 111.4 பில்லியன்களாகக் காணப்பட்டதுடன், மொத்த வெளிநாட்டு நிதியளிப்பு தேறிய அடிப்படையில் ரூபா 67.9 பில்லியனாக அல்லது மொ.உ. உற்பத்தியல் 0.8 சதவீதமாக 2013 இல் காணப்பட்டது.

அரசாங்க படுகடன் 2013 இன் இறுதியில் ரூபா 6,793.2 பில்லியனாகக் காணப்பட்டது. இது உள்நாட்டுப் படுகடன் ரூபா ரூபா 3,832.8 பில்லியனையும் வெளிநாட்டுப் படுகடனாக ரூபா 2,960.4 பில்லியனையும் கொண்டிருந்தது. மொ.உ. உற்பத்தியில் சதவீதமாக 2013 இல் மொத்த படுகடன் 78.3 சதவீதமாகக் காணப்பட்டதுடன், 2012 இல் 79.2 சதவீதமாகக் காணப்பட்டது. 2002 இல் மொ.உ. உற்பத்தியில் 105.6 சதவீதத்திலிருந்து படுகடன் குறைப்பானது, 11 வருடங்களில் 27.6 சதவீத புள்ளிக்கு வீழ்ச்சியடைந்ததுடன், வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது 2009 இல் 9.9 சதவீதத்திலிருந்து 5.9 சதவீதமாக கட்டுப்படுத்தப்பட்டதுடன், ஒப்பீட்டு ரீதியில் உயர் சராசரி மொ.உ.உ. வளர்ச்சி விகிதம் 6.7 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை, வெளிநாட்டு படுகடன் வீழ்ச்சியானது 2013 இல் ரூபா 25.5 பில்லியனாகக் காணப்பட்டது. நாணயமாற்று வீதங்களில் வீச்சுக்கள் மற்றும் உள்நாட்டு படுகடன் என்பன கழிப்பனவு காரணிகளில் அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டதுடன், நீண்டகால அரசாங்க பிணையங்கள் (புத்தகப் பெறுமதி மற்றும் முகப்பெறுமதியில் தேறிய வேறுபாடுகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் விநியோகம்) ஆபத்தினை குறைப்பதற்கு அதிகரிப்பினை ஏற்படுத்தியது.

2013 இல் மொத்த உள்நாட்டுப் படுகடன் மொத்த படுகடனில் 56.4 சதவீதமாகக் காணப்பட்டது. 2013 இல் உள்நாட்டு நிதியளிப்பு காரணமாக அதிக நம்பிக்கையின் காரணமாக மொ.உ.உ விகிதத்தில் உள்நாட்டு படுகடன் 2012 இல் 42.7 சதவீதத்திலிருந்து 44.2 சதவீதமாக அதிகரித்தது. மொத்த உள்நாட்டு படுகடனில் ரூபா 2,923 பில்லியன் அல்லது ஏறக்குறைய 76.3 சதவீதம் நடுத்தரக் காலத்திலிருந்து நீண்டகாலம் வரைக்குமான முதிர்ச்சிக் காலப்பகுதியினைக் கொண்டிருந்தது. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 74.8 சதவீதத்தினை பதிவாக்கியிருந்தது. மீதி ரூபா 909 பில்லியன் அல்லது 23.7 சதவீதம் குறுகிய கால முதிர்ச்சிக் காலப்பகுதியைக் கொண்டதாகவும் 2012 இல் 25.2 சதவீத வீழ்ச்சியினையும் பதிவாக்கியிருந்தது.

## 1.1 அரசாங்க வருமானம்


அரசாங்க வருமானம் 2013 இல் சிறந்த செயலாற்றுகையைக் காட்டியதுடன், 2013 யூன் வரைக்கும் காணப்பட்ட அதன் வீழ்ச்சிப் போக்கில் திருப்பமொன்று ஏற்பட்டது. 2012 இல் ஆரம்பத்தில் அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட கொள்கை மாற்றத்தின் விளைவாக பலவீனமடைந்த வரி வருமான சேகரிப்பொன்று காணப்பட்ட வேளையில் உள்நாட்டுக் கேள்வியினைக் கொண்ட நாணய மாற்று விகிதத்தில் காணப்பட்ட நெகிழ்வுப் போக்கு மற்றும் விரிவுபடுத்தப்பட்ட வர்த்தகப் பற்றாக்குறையினை முகாமை செய்வதற்கு கடன் வரையறைகளின் ஊடாக அதிகரித்த மட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதியினைக் குறைத்தல், வருடத்தில் இரண்டாவது அரைவாசியில் பொருளாதார செயற்பாடுகளில் ஏற்பட்ட உலகப் பொருளாதாரத்தின் படிப்படையான எழுச்சி என்பவற்றினால் நன்மை அடைந்தது. தொடர்ந்து அனைத்துப் பிரதான வரிகளிலிருந்தும் வருமானம் துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு பொருளாதார சேவைக் கட்டணம் நீங்கலான அனைத்து பிரதான வரிகளிலும் அதிகரிப்புக் காணப்பட்டது.

மொத்த வருமானம் 2012 இல் பதிவாகியிருந்த ரூபா 1,051.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 இல் ரூபா 1,137.4 பில்லியனாக 8.2 சதவீதத்தினால் அதிகரித்தது. குறித்த வருடத்தின் முதலாவது அரையாண்டில் அரசாங்க வருமானம் 7.6 சதவீதமாக அதிகரித்ததுடன் வருடத்தின் இரண்டாவது அரையாண்டில் 8.2 சதவீதமாக அதிகரித்தது. மொத்த வருமான செயலாற்றுகையானது வரி வருமானத்தில் 10.7 சதவீதத்தினை அதிகரித்ததுடன் ரூபா 1,005.9 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை வரியல்லாத வருமானம் 2012 இல் 131.6 பில்லியனாக அதாவது 7.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உ இல் சதவீதமாக மொத்த வருமானம் 2013 இல் 13.1 சதவிதமாகக் காணப்பட்டதுடன் வரவு செலவுத்திட்ட இலக்கான 14.7 சதவித வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிக் கேள்வி அழுத்தமேற்பட்டதுடன் உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகளில் 2013 இல் முதல் அரையாண்டில் மந்தநிலை ஏற்பட்டது.

2013 இல் வருமான வரியிலிருந்து 19.2 சதவீத வளர்ச்சியினைக் கொண்டிருந்தது. இது 2011 இல் வரி விதி விகிதங்களைக் குறைப்பதற்கும் வரி அடிப்படையினை விரிவாக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட வரி மறு சீரமைப்புகளின் ஒன்றிணைந்த தாக்கத்தினால் ஏற்பட்டதாகும். சம்பளத்திலிருந்து வரி வருமானம் (உ.பெ.செ.வரி) அதிக சம்பள வருமானம் அதிகரித்தமை மற்றும் வரிகள் போன்ற ஊழியப் பொறுப்புக்கள், அடிப்படையில் இறுதி வரியாக அத்தகைய வரி சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குனர்கள் இணக்கப்பாடு அதிகரித்தமை காரணமாக 25.7 சதவீதமாக அதிகரித்தது. எவ்வாறாயினும் குறைந்த வரிக் கட்டமைப்பு மற்றும் உயர்ந்த வரி விதிப்பனவு எல்லை என்பன 2011 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வரி முறைமையில் காணப்பட்ட போதிலும் இவ்வதிகரிப்பு ஏற்பட்டது. மூலப் பொருள் மூலத்தில் இறுதி வரியாக விதிக்கப்பட்ட வட்டி மீதான வரி 2013 இல் 30.7 சதவீத உயர் வளர்ச்சியினைப் பதிவாக்கியது. நீண்ட கால அரசாங்கப் பிணையங்களின் புறள்வு மற்றும் வங்கித் தொழில், நிதியியல் முறைமையில் வைப்பினை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி என்பன இத்தகைய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வருமானம் மீதான வரி மற்றும் இலாபம் ஊக்கமளிக்கக்கூடிய செயலாற்றுகையை பிரதிபளித்ததுடன், வங்கித் தொழில் மற்றும் நிதி நிறுவனங்கள், காப்புறுதி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகம், புகையிலை மற்றும் உணவுக் குடிபானங்கள் தயாரிப்பு, சுற்றுலா, சேவைகள் என்பவற்றின் வளர்ச்சியினால் இவ்வருடத்தில் கடன் வளர்ச்சி தொடர்ந்து விழ்ச்சியடைந்த போதிலும் 23.1 சதவீதமாக அதிகரித்தது. பொதுவான வரி வருமானத்தில் வருமான வரியின் பங்கினை அதிகரிப்பதற்கு நுகர்வு அடிப்படையிலான நேரடியல்லாத வரிகளை அடிப்படையாகக் கொண்ட வருமானத்தின் வளர்ச்சி உயர்வாகக் காணப்படுகின்றது.

உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகளில் நேரடியல்லாத வரிகளிலிருந்து வருமானம் குறித்த வருடத்தின் இரண்டாவது அரையாண்டில் முன்னேற்றகரமான பொருளாதார செயற்பாடுகளுடன் முன்னேற்றம் ஒன்றினைக்

காட்டியதுடன் உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகள் மீதான நேரடியல்லாத வரிகளிலிருந்து வருமானம் கிடைத்தது. 2011 இற்கு முன்னர் காணப்பட்ட 12 மற்றும் 20 சதவீத இரட்டை விகிதக் கட்டமைப்பிற்கு எதிராக 12 சதவிதத்தில் பெ.சே. வரியினை ஒற்றை வரி விகிதத்தின் கீழ் முறைசார்ந்த அடிப்படையில் மேம்படுத்தியதன் விளைவாகும். 2013 இல் உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகள் மீதான பெ.சே.வரியிலிருந்து வரி வருமானம் 13.6 சதவிதமாக அதிகரித்தது. அதேபோன்று உள்நாட்டு செயற்பாடுகள் மீதான தேசக் கட்டுமான வரி 9.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை பொருளாதார சேவைக் கட்டணங்களிலிருந்து வருமனாம் 55.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான நிவாரணமாக காலாண்டுக்கு ரூபா 50 மில்லியன் வரி விதிப்பனவு எல்லை அதிகரிக்கப்பட்டு வருமான வரி விதிக்கப்படக்கூடிய இலாபங்கள் வரி விடுமுறை விரிவாக்கல் மீதான ஏற்பாடு என்பன ஏதேனும் வியாபாரத்தின் புறள்வு மீதான பொருளாதார சேவைக் கட்டண அறவீட்டினை நீக்கியமையும் இக்காலப் பகுதியில் இடம்பெற்றன.




## 1.2. அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு – 2013 (ரூபா. மில்)

| விடயம் | 2012 உண்மை | 2013 தற்காலிக | விளக்கம் |
|---|---|---|---|
| **வருமான வரி** | 172,593 | 205,666 | வர்த்தக வங்கிகள், சுற்றுலா, ஏற்றுமதி, தகவல் தொழில் நுட்ப மற்றும் உயர் தொழில் சேவைகள் போன்ற துறைகளில் உயர் சம்பளங்கள், உயர்ந்த வேலைவாய்ப்பு மற்றும் அரசாங்கத்துறை ஊழியர்கள் உள்ளடங்கலாக முன்னேற்றகரமான இணக்கப்பாடு மற்றும் விரிவாக்கப்பட்ட அடிப்படை என்பன காரணமாக உழைக்கும் பொழுது செலுத்தும் வரியிலிருந்து குறிப்பிடத்தக்களவு வருமான அதிகரிப்புக் காணப்பட்டது. தனியார்துறை செயற்பாடுகளின் வளர்ச்சி காரணமாக உயர் பொருளாதார நன்மைகளினால் நிறுவன வருமான வரி குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. வரி அடிப்படை |


| | | | |
|---|---|---|---|
| | | | அதிகரித்தது என்ற வகையில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டிவீதம் மற்றும் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் விநியோகம், வட்டி மீதான வரி என்பன வருமான வரி வருமானத்தில் சாதகமான பங்களிப்பினை வழங்கியது. |
| **பெறுமதி சேர் வரி உற்பத்தி வரி** | 229,604 | 250,523 | மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்தில் பெ.சே.வரி விதிப்பனவு, ஹோட்டல்கள், உணவுச்சாலைகள் மற்றும் உபசரிப்புச் சேவைகள் மற்றும் தயாரிப்புத் துறை போன்ற சில துறைகளின் சிறந்த செயலாற்றுகை அத்துடன் இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வரி முறைமையினால் பெ.சே.வரி காசு மீளளிப்பு வீழ்ச்சி என்பன உள்நாட்டு செயற்பாடுகளிலிருந்து பெ.சே. வருமானம் அதிகரிப்பதற்கு உதவியாக இருந்தது. எவ்வாறாயினும் உயர்ந்த மதுவரி, கடன் வரையடைகள் மற்றும் நாணயமாற்று தேய்வு உள்ளடங்கலான வியாபார செயன்முறை வெளியார் சேவைகளில் காணப்படும் பிரச்சினைகளைப் போக்குவதற்கான கொள்கை நடவடிக்கைகளினால் இற்குமதிகளில் வீழ்ச்சி என்பன இறக்குமதிகளில் பாதகமாக தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன் பெ.சே. வரி வருமானத்தினை உண்மையான மதிப்பீட்டில் இருந்து விலகிச் செல்வதற்குக் காரணமாக இருந்தது. |
| **உற்பத்தி வரி** | 223,960 | 250,700 | மதுபானம், சிகரெட்டுக்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் அத்துடன் மோட்டார் வானங்கள் போன்ற உற்பத்தித் தீர்வையின் பிரதான மூலங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதனால் வருமான அதிகரிப்பு ஏற்பட்டது. பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் ஏனைய மூலங்களிலிருந்து உற்பத்தித் தீர்வை 2012 இல் குறித்த மூலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வருமானம் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது |
| **இறக்குமதித் தீர்வை** | 80,155 | 83,123 | வரி விதிப்பனவு பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி இம்மூலத்திலிருந்து வருமானம் மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும் உள்நாட்டு பாற்பொருள் உற்பத்தினை ஊக்குவிப்பதற்காக பால் மா இறக்குமதியில் விதிக்கப்பட்டிருந்த தீர்வை விலக்களிப்பு குறைக்கப்பட்டதுடன் பியர், மற்றும் மதுசார ஸ்பிரித்துகள், சிகரெட்டுகள் மற்றும் புகையிலை உற்பத்திகள் என்பனவற்றின் மீதான இறக்குமதத்த் தீர்வை அதிகரிப்பு இறக்குமதித் |

| | | | |
|---|---|---|---|
| | | | தீர்வை வருமானத்தில் சாதகமான பங்களிப்பினை வழங்கியது. |
| **துறைமுகங்கள், விமான நிலைய அபிவிருத்தி அறவீடு** | 70,711 | 61,987 | அனைத்து இறக்குமதிகளும் வீழ்ச்சியடைந்ததுடன் விசேடமாக நுகர்வுப் பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதி வீழ்ச்சியடைந்தமை கடந்த ஆண்டில் இவ்வரி வருமானம் குறைவடைவதற்குக் காரணமாகியது. |
| **தேசக் கட்டுமான வரி** | 38,736 | 40,937 | உணவு, குடிபானம், உலோக உற்பத்திகள் உள்ளடங்கலான தயாரிப்புத் துறை மற்றும் ஹோட்டல்கள், உணவுச் சாலைகள் மற்றும் வர்த்தக வங்கித் தொழிற்பாடுகள் உள்ளடங்கலான சேவைகள் தொடர்பான செயற்பாடுகளில் முன்னேற்றம் அத்துடன் நாட்டில் சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சி என்பன அனைத்து வியாபாரங்களுக்கும் தேசக் கட்டுமான வரி விதிப்பனவு எல்லையினை அதிகரித்தமை 2012 இல் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்திய போதிலும் தேசக் கட்டுமான வரி வருமானத்தில் முன்னேற்றம் ஏற்படுதவதற்கு காரணமாக அமைந்தன. |
| **ஏனைய வரிகள்** | 93,749 | 112,958 | விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டுப் பட்டியலில் புதிதாக நுகர்வுப் பொருட்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதனாலும் சில தெரிவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்திச் செயன்முறையினை ஊக்குவிக்கும் வகையில் வரி விகிதத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் காரணமாகவும் விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டிலிருந்து வருமானம் அதிகரித்தது. அதேவேளை தொலைத் தொடர்பு அறவீட்டு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும் முன்னைய வருடத்தினை விடக் கூடுதலாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் மொத்த இறக்குமதிகளில் வீழ்ச்சி விசேட நுகர்வுப் பொருள் அறவீடு செஸ் வரி வருமானம் என்பவற்றினை உண்மையான மதிப்பீடுகளிலிருந்து விலகச் செய்தது. |
| **வரியல்லாத வருமானம்** | 142,547 | 131,553 | விற்பனைகள் மற்றும் அறவீடுகளிலிருந்து வருமானம் அதிகரித்த போதிலும் இலங்கை மத்திய வங்கியிலிருந்து இலாப மாற்றல்கள் குறைவடைந்தமையானது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வரி அல்லாத வருமானத்தினை பெரிதளவும குறையச் செய்தது. |

## 2. செயலாற்றுகை -2013

### 2.1 வருமானம் சேகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சகல திணைக்களங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடல்.

பொருளாதார பகுப்பாய்வுகளின் அடிப்படையில், 2013 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் 1,137.4 பில்லியன் ரூபாய்களாகும். இது 2012 ஆம் ஆண்டில் அடையப் பெற்ற ரூபா பில்லியன் 1,015.5 உடன் ஒப்பிடும் போது அது 8.2 சத வீதத்தினால் அதிகரித்தது. அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் வரி வருமானம் ரூபா 1,005.9 பில்லியனாக இருந்த அதே நேரம் வரியல்லாத வருமானம் ரூபா 131.6 பில்லியனாகக் காணப்பட்டது.



## 2.2. அரசாங்க வருமானப் பொழிப்பு

**ரூபா. மில்**

| விடயம் | 2012 | 2013 |
|---|---|---|
| **வரி வருமானம்** | **908,913** | **1,005,895** |
| வருமான வரி | 172,593 | 205,666 |
| பெறுமதி சேர் வரி | 229,604 | 250,523 |
| தேசக் கட்டுமான வரி | 38,736 | 40,937 |
| உற்பத்தி வரி | 223,960 | 250,700 |
| இறக்குமதித் தீர்வைகள் | 80,155 | 83,123 |
| துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 70,111 | 61,987 |
| விசேட நுகர்வுப் பண்ட அறவீடு | 33,666 | 46,705 |
| ஏனையவை | 60,088 | 66,255 |
| **வரியல்லா வருமானம்** | **142,547** | **131,552** |
| வட்டி / வாடகை | 11,686 | 11,955 |
| இலாபங்களும் பங்கிலாபங்களும் | 46,761 | 36,169 |
| விற்பனைகளும் கட்டணங்களும் | 26,019 | 40,720 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள் | 11,738 | 15,145 |
| மத்திய வங்கி இலாப மாற்றல்கள் | 43,000 | 26,350 |
| பிற | 3,343 | 2,173 |
| **மொத்த வருமானம்** | **1,051,460** | **1,137,447** |

**2.3 அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அமுல்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களுக்கேற்ப வரி தொடர்பான சட்ட ஏற்பாடுகளைத் திருத்துதல்.**

**2.3.1. இத்திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்தமானி அறிவித்தல்கள் கீழ் வருமாறு:**

### i) உற்பத்தி வரி(விசேட ஏற்பாடுகள்) சட்டம்

- 1989 ன் 13ம் இலக்க உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள்) சட்டம், 1793/05 ம் இலக்க 2013.01.15 திகதிய வர்த்தமானி அறிவித்தல் - 2012 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு அமைவாக ஏற்புடைய வரிகளைக் குறைப்பதற்கு வழங்கப்பட்ட நிபந்தனைகளை திருத்துதல். விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் கம்பனியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தினை

கொண்டுள்ள விமான நிலைய வாகன ஓட்டுனர்களினால் விமான நிலையங்களுக்கு வழங்கப்படும் விமானப் பயனிகளுக்கான போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களை பதிலீடு செய்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம்.

- 1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1821/1 ஆம் இலக்க 29.07.13 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல்) புகையிலையிலான அல்லது புகையிலைக்கு பதிலானவையிலான சுருட்டுக்கள், செருட்டுக்கள் சிகாரில் லோகல் மற்றும் சிகரெட்டுக்கள் என்பனவற்றின் உற்பத்திவரியினை 12% இலிருந்து 27% ஆக அதிகரிக்கவும், ஆட்கள், பொருள் போக்குவரத்துக்கென வெவ்வேறாக பிரிக்கப்பட்ட வாகனங்கள் என்பனவற்றின் உற்பத்தி வரியினை 15% இலிருந்து 29% ஆக அதிகரிக்கவும் 05 தொன்களுக்கு மேற்பட்ட ஆனால் 20 தொன்களுக்கு மேற்படாத நிறைகொண்ட வாகனங்களின் உற்பத்தி வரியினை 20% இலிருந்து 35% ஆக அதிகரிக்கவும் 20 தொன்களுக்கு மேற்பட்ட சரக்கு போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் வாகன வரியில் காணப்படும் வரி ஏற்றத்தாழ்வினை குறைத்து அத்தகைய வாகனங்கள் மூலம் வீதி வலைப்பின்னலுக்கு அதிக பங்களிப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும்.
- 1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1837/29 ஆம் இலக்க 2013.11.21 ஆந்திகதிய வர்த்தமானி அறிவித்தல் தேசிய உப தலைப்புக்கள் மற்றும் இனங்காணப்பட்ட இ.ப.கூ விபரங்களை மீளமைத்து .ப.கூ 2710.12.20, 2710.19.40, 8704.21.51,8704.21.52, 8704.31.41 மற்றும் 8704.31.42 என்பனவற்றின் உற்பத்தி வரி விகிதங்களை திருத்தியமைத்து வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் 2014 அமுல்படுத்துவதற்கும், அத்தியாயம் 87 இல் உற்பத்தி வரித் தீர்வைகளை சரிசெய்து சுங்கத் தீர்வைகளை குறைத்து சாதகமான வருமானத்தினை பெற்றுக் கொள்வதற்காகவும்.

## ii) செஸ் வரி

- 1979ஆம் ஆண்டின் 40ம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம், (1794/9 ஆம் இலக்க 2013.01.22ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் )- சலவை செய்யப்படாத பருத்தி துணிகள் மீதான இறக்குமதி செஸ் விகிதத்தினை கி.கி ஒன்றுக்கு ரூபா 75 ஆகவும் மற்றும் ஏனைய துணிகளுக்கு கி.கி ஒன்று ரூபா 100 ஆகவும் குறைத்து ஆடைக் கைத்தொழிலின் உள்நாட்டு உற்பத்தியினை ஊக்குவிப்பதற்காக்.
- 1979ஆம் ஆண்டின் 40ம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம், (1794/10 ஆம் இலக்க 2013.01.22 ஆந் திகதிய வர்த்தமானி) கொழும்புத் தேயிலை ஏல விற்பனையில் மொத்த தேயிலையின் சராசரி விலை மீது மொத்த தேயிலைக்கான ஏற்றுமதி செஸ் வரி கி.கி ரூபா 10 அல்லது 2.5 சதவீதம் இரண்டில் எது கூடியதோ அதுவாகத் திருத்தப்படுவதற்கும், ஒவ்வொரு மாதத்திற்குமான கொழும்பு தேயிலை ஏலவிற்பனை சராசரி விலையானது இலங்கை தேயிலைச் சபை பணிப்பாளர் நாயகத்துடனான கலந்தாலோசனையின் பின்னர் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுவதுடன்அவ் விலையானது அந்த மாதத்தின் முதலாம் திகதி முதல் பயன்வலுப்பெறும். கொழும்பு தேயிலை ஏலவிற்பனை சராசரி விலையானது, விலைக் கணிப்பீடு பயன்வலுப்பெறுகின்ற திகதிக்குரிய மாதத்திற்கு தொடர்தேர்ச்சியான முன்னைய இரண்டு மாதங்களில் கொழும்பு தேயிலை ஏல விற்பனை சந்தையில் நிலவிய சராசரி தேயிலை விலைகளைக் கவனத்திற் கொண்டு தீர்மானிக்கப்படும்.
- 1979 ஆம் ஆண்டின் 40 ம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம், (1837/30 ஆம் இலக்க 2013.11.21 ஆந் திகதிய வர்த்தமானி) - உள்நாட்டு பெறுமதி சேர்ப்பினை ஊக்குவிப்பதற்கும் பாற்பொருட்கள், மரக்கறிகள், பழங்கள், உணவுப் பொருட்கள், உருக்குப் பொருட்கள, தளபாடங்கள் மீதான செஸ்

வரியினைத் திருத்துவதற்கும். சர்வதேச ரீதியில் வியாபாரப் பொருட்களை ஊக்குவிப்பதற்கு வடிவமைப்பு பேனைகள், கழுத்துப் பட்டிகள், கழுத்துப் பூக்கள் மீதான செஸ் வரியினை நீக்குவதற்கும்.

- 1979 ஆம் ஆண்டின் 40 ம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம், (1837/31 ஆம் இலக்க 2013.11.21 ஆந் திகதிய வர்த்தமானி) - மிளகு, கருவா, கராம்பு மற்றும் சாதிக்காய் இறக்குமதி மீது செஸ் வரியினை அறிமுகப்படுத்துவதற்காக.

### iii) மதுவரி கட்டளைச் சட்டம்

- மதுவரி அறிவித்தல் இலக்கம். 957 ( 2013.04.03 ஆந் திகதிய 0804/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிலையங்களுக்கு, வைத்திய சாலைகள் மற்றும் திணைக்களங்களுக்கு, மருத்துவப் பொருட்களை தயாரிப்பதற்கும் கைத்தொழில் உற்பத்திகளுக்கும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஈத்தைல் மதுசாரத்தின் இறக்குமதி மீதான மதுவரித் தீர்வையினை திருத்துவதற்காக
- மதுவரி அறிவித்தல் இலக்கம். 958 ( 2013..07.29 ஆந் திகதிய 1821/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிலையங்கள், வைத்திய சாலைகள், திணைக்களங்கள் என்பனவற்றிற்கு மருந்துப் பொருட்களையும் கைத்தொழில் உற்பத்திகளையும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிரித்துக்களை மாதமொன்றுக்கு 20,000 லீற்றர்களை விடுவிப்பதன் பேரில் மதுவரிக் கட்டணத்தினை அதிகரிப்பதற்காகவும், மதுவரிக் கட்டணத்திற்கு உட்படாத இறுதிப் பொருட்கள், மருந்துக் கலவைகள் உற்பத்தி மற்றும் கைத்தொழில் உற்பத்திக்காக பயன்படும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்படாத எதனைல் ஸ்பிரித்துக்களை மாதமொன்றுக்கு 20,000 லீற்றர்களை விடுவிப்பதன் பேரில் லீற்றருக்கான கட்டணத்தினை குறிப்பீடு செய்வதற்காக
- மதுவரி அறிவித்தல் இலக்கம். 959,960 மற்றும் 961 ( 2013.07.29 ஆந் திகதிய 1821/04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - 2013.07.31 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் மொலேசியஸ், பனை, தெங்கு மற்றும் பதனிடப்பட்ட சாராயம் என்பவற்றுக்கு ரூபா 1,043 இலிருந்து ரூபா 1,110 ஆக லீற்றர் ஒன்றுக்கு உற்பத்தி தீர்வையினை அதிகரித்தல். இலங்கையில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு ஸ்பிரித்துகளுக்கு புரூப் லீற்றரொன்று ரூபா 1,183 இலிருந்து 1,250 ரூபா ஆக அதிகரித்தது. பாகு மதுபானத்திற்கு 5 சதவீதத்திற்கு மேல் ரூபா 116 இலிருந்து ரூபா 130 ஆக அதிகரிப்பதற்காக 5 சதவீதத்திற்கு குறைவான பாகு மதுபானத்திற்கு ரூபா 100 இலிருந்து ரூபா 110 ஆக அதிகரப்பதற்காக

### iv) துறைமுகங்கள் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு

- 2011 இன் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (2013.11.22 ஆந்திகதிய 1837/ 46 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.) பெற்றோலிய எண்ணெய்கள் நிலக்கரித் தார் கலவை (பிற்றுமின்ஸ்) கனிப்பொருள்களில் இருந்து பெறப்பட்ட ஏனைய பொருட்கள், உலர்த்திய, மாவாக்கிய, ஏனைய பொருட்கள், மனித இரத்தம், விலங்கு இரத்தத்தினால் தயாரிக்கப்பட்டவை தடுப்பூசி மருந்துகள், மருந்துப் பொருட்கள் (இயைபு முறைக் குறியீடு 30.02, 30.05 அல்லது 30.06 பொருட்கள் நீங்கலாக) மருந்துப் பொருட்கள் இறக்குமதி, விமானப் பொருட்கள் என்பவற்றுக்கு விதிவிலக்களிப்பதற்காக

## v) நிதிச் சட்டத்தின் கீழான அறிவித்தல்

- 2012 இன் 12 ஆம் இலக்க நிதிச்சட்டம் (1818/30 ஆம் இலக்க, 2013.07.11 ஆந் திகதிய 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வர்த்தக மைய வர்த்தமானி அறிவித்தல்) 2013 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு பின்வரும் விடயங்களை வழங்குதல்.
  (அ) வழிகாட்டல் மற்றும் அங்கீகாரத்திற்கான ஒழுங்குவிதிகளை பிரசுரித்தல்
  (ஆ)வழங்கப்பட வேண்டிய விலக்களிப்புகளின் எல்லையினைத் தீர்மானித்தல்
  (இ) இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிலுவைகளை வெளிப்படுத்தல்.

  இதன் முக்கிய நோக்கம் சுதந்திர துறைமுகங்கள் மற்றும் பிணையப் பிரதேசங்களில் விற்பனைகளை அதிகரித்தல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல். முதலீட்டு ஊக்குவிப்புச் சபையினால் தொடர்புடைய ஏற்பாடுகளுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல். இந்த வர்த்தமானியில் குறிப்பீடு செய்யப்பட்ட சுதந்திரத் துறைமுகம் மற்றும் பிணைப் பிரதேசங்கள் தொடர்பில் ஏற்பாடுகளைச் செய்ய.

- 2013 இன் 12 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழான கட்டளை (1824/23 ஆம் இலக்க, 2013.08.23 ஆந்திகதிய வர்த்தமானி அறிவித்தல்.) வரிக்கு பின்னரான இலாபம் மீது வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்கள் 1 சதவீத பயிர் காப்புறுதி அறவீட்டினை செலுத்துதல் தொடர்பான வர்த்தமானி, வரட்சி, வெள்ளம் மற்றும் காட்டு யானைகளினால் சேதமாக்கப்பட்ட பயிர்களுக்கான நட்டயீட்டுக் கொடுப்பனவுக்காக அரசிறை அறவீட்டின் வருமானத்தினை பயன்படுத்துவதற்காக.

## (Vi) முத்திரை வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம்

- 2006ன் 12ம் இலக்க முத்திரைத் தீர்வை (விஷேட ஏற்பாடுகள்) சட்டம், 1809Æ19 ம் இலக்க 2013.05.10 திகதிய வர்த்தமானி அறிவித்தல் - சத்திய கடதாசி மீது ஏற்புடையதான முத்திரைத் தீர்வையினை ரூபா 250 ல் இருந்து ரூபா 50 ஆக குறைப்பதற்காக.

## (Vii) உள்நாட்டு அரசிறைச் சட்டம்

- 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை சட்டம் (2013.08.12) ஆம் திகதிய 1823/5 வர்த்தமானி அறிவித்தல் - சர்வதேச கொடுக்கல், வாங்கல் மீதான விலை நிர்ணயிப்பு ஒழுங்குபடுத்தல் விதிகள் மற்றும் சர்வதேச கொடுக்கல் வாங்கல் அல்லாத விலை நிர்ணயிப்பு ஒழுங்குபடுத்தல் விதிகளைத் திருத்துவதற்காக
- 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை சட்டம் (2013.09.17) ஆம் திகதிய 1828/9 வர்த்தமானி அறிவித்தல் ) இலங்கை மற்றும் இந்தியா நாடுகளுக்கிடையிலான இரட்டை வரி விதிப்பனவு மற்றும் அரசிறை எய்ப்பினை தடுத்தலிருந்து நிவாரணம் வழங்குவதற்கான உடன்படிக்கையினை பிரசுரிப்பதற்காக.
- 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை சட்டம் (2013.11.20) ஆம் திகதிய 1837/13 வர்த்தமானி அறிவித்தல் ) இலங்கை மற்றும் பெலாரஸ் நாடுகளுக்கிடையிலான இரட்டை வரி விதிப்பனவு மற்றும் அரசிறை எய்ப்பினை தடுத்தலிருந்து நிவாரணம் வழங்குவதற்கான உடன்படிக்கையினை பிரசுரித்தல்.

- 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை சட்டம் (2013.11.20) ஆம் திகதிய 1837/14 வர்த்தமானி அறிவித்தல் ) இலங்கை மற்றும் சீசெல்ஸ் நாடுகளுக்கிடையிலான இரட்டை வரி விதிப்பனவு மற்றும் அரசிறை எய்ப்பினை தடுத்தலிருந்து நிவாரணம் வழங்குவதற்கான உடன்படிக்கையினை பிரசுரித்தல்.
- 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை சட்டம் (2013.11.26 ஆம் திகதிய 1838/8 வர்த்தமானி அறிவித்தல்) இலங்கை மற்றும் பலஸ்தீன் நாடுகளுக்கிடையிலான இரட்டை வரி விதிப்பனவு மற்றும் அரசிறை எய்ப்பினை தடுத்தலிருந்து நிவாரணம் வழங்குவதற்கான உடன்படிக்கையினை பிரசுரித்தல்.
- 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை சட்டம் (2013.11.26 ஆம் திகதிய 1838/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) இலங்கை மற்றும் லக்சம்போர்க் நாடுகளுக்கிடையிலான இரட்டை வரி விதிப்பனவு மற்றும் அரசிறை எய்ப்பினை தடுத்தலிருந்து நிவாரணம் வழங்குவதற்கான உடன்படிக்கையினை பிரசுரித்தல்.

**(Viii) 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 08 வர்த்தமானி அறிவித்தல்கள்**

- 2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம் ( 2013.05.31 ஆந் திகதிய 1812/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) – நிதி , திட்டமிடல் அமைச்சின் ஆண்டறிக்கை - 2012 இனை வெளியிடுவதற்காக.
- 2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம் (2013.07.02 ஆந் திகதிய 1817/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) 2013 ஆம் ஆண்டிற்கான அரையாண்டு அரசிறை முகாமைத்துவ பொறுப்பு அறிக்கையினை வெளியிடுவதற்காக
- 2003ன் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம் (2013.11.21 ஆந் திகதிய 1837/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) 2014 ஆம் ஆண்டிற்கான அரசிறை முகாமைத்துவ அறிக்கையினை வெளியிடுவதற்காக.

### 2.3.2 இத்திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாராளுமன்ற சட்ட திருத்தங்கள்.

- 2013 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம்
- 2013 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசக் கட்டுமாண வரி (திருத்தச்) சட்டம்
- 2013 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டு (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மதுவரி (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க தொலைதொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்தச்) சட்டம
- 2013 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க அட்டோனி தத்துவப் பத்திர (திருத்தச்) சட்டம்

- 2013 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்
- 2013 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க வி'ேட உபாய அபிவிருத்தி கருத்திட்ட (திருத்தச்) சட்டம்
- 2013 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஆவணங்கள் பதிவு (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருமண பதிவு (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க கண்டிய விவாக மற்றும் விவாகரத்து (திருத்தச்) சட்டம்
- 2013 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து (திருத்தச்) சட்டம்.
- 2013 ஆம் ஆண்டின் 25 ஆம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு (திருத்தச்) சட்டம்

**2.4 அரசிறைக் கொள்கை தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சரினால் 2013 ஆம் ஆண்டு அமைச்சரவைக்கு பல அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.அவ்வாறே, அரசிறைக் கொள்கை தொடர்பில் கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சர் அவர்களின் அவதானிப்புக்கள் வழங்கப்பட வேண்டியுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களும் , இத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

**2.5 பல்வேறு வரிகள் தொடர்பான சட்ட மூலங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தலும் அதனைப் பின்தொடர்ந்த பணிகளையும் மேற்கொள்ளல்.**

- வரி சட்ட யாப்பினைத் திருத்துதல் தொடர்பில், நிதி திட்டமிடல் அமைச்சின் சட்ட விவகாரத் திணைக்களம் , சட்ட வரைஞர் திணைக்களம், கௌரவ சட்டமா அதிபர், உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் , அரசாங்க அச்சகம் மற்றும் பாராளுமன்றம் என்பனவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, குறித்த பணிகளை நிறைவேற்றப்படுகின்றன.
- வரி அல்லது கட்டண மீளமைப்பு தொடர்பிலான வர்தமானி அறிவித்தல்கள் 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.

**2.6. சகல வருமான மூலங்களையும் மீளாய்வுக்குட்படுத்தல், வருமானங்கள் பற்றிய குறித்த தகவல்களைத் திரட்டுதல், வருமான மதிப்பீடு மற்றும் காசுப்பாய்ச்சல் நிலைமைகளை கண்காணித்தல்.**

- 2014 ஆம் ஆண்டிற்கான உத்தேச வருமான மதிப்பீடு, வருமானத் திரட்டல் திணைக்களத்துடன் இணைந்து தயாரிக்கப்படுகின்றது.
- திறைசேரி செயலாளர், திறைசேரி பிரதிச் செயலாளர், திறைசேரித் திணைக்களப் பிரதி நிதிகள் , வருமானம் திரட்டும் உத்தியோகத்தர்கள், மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பங்களிப்புடன் அரசிறைக் கொள்கைக் குழுவினால் நான்கு கூட்டங்கள் (காலாண்டு அடிப்படையில்) நடாத்தப்பட்டுள்ளன.
- வருமானத் திரட்டு அறிக்கை மாதாந்த வருமான அறிக்கை மூலமும் விசேட தகவல்களைப் பெற்றுக் கொள்வதன் மூலமும் மேற்பார்வை செய்யப்பட்டதுடன், கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்காக செயலாற்றுகை பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

**2.7 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கைகளை வெளியிடுதல்**

- **வருடாந்த அறிக்கை – 2012**

  குறித்த நிதியாண்டு முடிவடைந்து 5 மாத காலம் கழிவதற்கு முன்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டிய இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை, அதாவது 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2013 மே மாதத்தில் வெளியிடப்பட்டது.

- **அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை – 2013**

  குறித்த ஆண்டின் யூன் மாதத்தின் இறுதித் தினத்தன்று அல்லது ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 6 மாதம் கழிவதற்கு முன்பு ஆகிய இரு காலப் பிரிவுகளின் பின்னர் வரும் நாளுக்கு முன்பதாக ஆண்டு தோறும் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், 2013 ஆம் ஆண்டின் அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை 2013 யூன் மாதத்தில் வெளியிடப்பட்டது.

- **அரசிறை முகாமைத்துவ அறிக்கை 2013**

  2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆவது பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற, அரசிறை முலோபாய அறிக்கையும் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை தொடர்பிலான அறிக்கைகள் இரண்டையும் உள்ளடக்கிய அரசிறை முகாமைத்துவ அறிக்கையானது 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது.

## 3. நிர்வாகமும் கணக்குகளும்

### 3.1 நிறுவனக் கட்டமைப்பு

அரசிறைக் கொள்கைத் திணைக்களம் 65 அனுமதிக்கப்பட்ட பதவியணியினரைக் கொண்டுள்ளது. அதற்கமைய, பின்வரும் அலுவலர்கள் இத்திணைக்களத்தில் பணியாற்றுகின்றனர்.

**பதவியணி விபரம் - 2013 (2013.12.31 அன்றுள்ளவாறு)**

| புதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | பதவி வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01* | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் -இ.நி.சே. | 01 | - | 01 |
| பணிப்பாளர் | | | |
| இ.நி.சே. | 02 | 01 | 01 |
| இ.தி.சே | 01 | 01*** | - |
| சிரேஷ்ட பொருளியலாளர் | 01 | - | 01 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்- இ.நி.சே. | 09 | 04 + 01**+ 01*** | 03 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்-இ.தி.சே | 04 | 04 | - |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்-இ.க.சே. | 01 | 01 | - |
| பொருளியலாளர் | 01 | - | 01 |
| புள்ளிவிபரவியலாளர் | 01 | - | 01 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| மொழி பெயர்ப்பாளர் | 02 | 01 | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 06 | 03 | 03 |
| அபிவிருத்தி உதவியாளர் | 06 | 03 | 03 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 13 | 07 | 06 |
| சாரதிகள் | 06 | 03 | 03 |
| அலுவலக உதவியாளர் | 09 | 07 | 02 |
| **மொத்தம்** | **65** | **39** | **26** |

**அனுமதிக்கப்பட்ட பதவியணியில் இலங்கை மத்திய வங்கியின் பதவி நிலை அலுவலர் ஒருவர் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றுகிறார்.*

***இதற்கு மேலதிகமாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட சிரேஷ்ட மதிப்பீட்டு அலுவலர் ஒருவர் பிரதிப் பணிப்பாளராக பணியாற்றுகின்றனர்*

**** மேற்படிப்பிற்காக விடுமுறை பெற்றுச் சென்றுள்ளார்.*

*உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட .வரி ஆலோசகர் ஒருவரினது சேவையும் இத் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெறுகின்றது.*

### 3.2. மனிதவள அபிவிருத்தி

திணைக்களத்தின் பதவியினருக்கு அவர்களின் தொழில்சார் திறமைகளை விருத்திசெய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் உள்நாட்டுப் பயிற்சிக் கற்கை நெறிகளில் பங்கேற்கச் செய்யப்பட்டனர். அதனூடாக அவர்களின்

வினைத்திறன் பெறுகி திணைக்களத்தின் பணிகளை செயற்றிறன்மிக்கதாக மாற்றிக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. பதவியினருக்காக 2013 இல் வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் குறித்த விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**3.2.1 உள்நாட்டுப் பயிற்சிகள்**

| பெயர் | பதவி | பயிற்சி பெற்ற நிறுவகம் & நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| திரு. ஜே.எம.எஸ்.என். ஜயசிங்ஹ | பணிப்பாளர் | Academy of Financial Studies - Seminar on Public Finance Management | 22 - 24 ஏப்ரல் 2013 |
| செல்வி. கே.ஏ.ரம்யா காந்தி | பணிப்பாளர் | CBS - Treasury & Foreign Exchange Operations | 29 யூலை – 01 ஓகத்து 2013 |
| திரு. எஸ்.பீ.கிரிவத்துடுவகே . | உதவிப் பணிப்பாளர் | Fiscal Management Efficiency Project - Capacity Building Program on ITMIS | 26 பெப்ரவரி 2013 |
| செல்வி. எச்.டீ.ஏ.றுக்ஷிணி | உதவிப் பணிப்பாளர் | Academy of Financial Studies - Seminar on Public Finance Management | 22 - 24 ஏப்ரல் 2013 |
| | | PRAG Institute - VAT & SVAT | 19 யூலை 2013 |
| திருமதி. டப்.எம்.ஏ.விமலஜீவ | உதவிப் பணிப்பாளர் | Chartered Institute of Public Finance & Accountancy (CIPFA)London - Awareness Programme on Sri Lanka Pubic Sector Accounting Standards (SLPSAS) | 10 யூன் 2013 |
| | | Institute of chartered Accountants of SL - national Conference of the Chartered Accountants | 24 - 26 ஒக்தோபர் 2013 |
| திரு.ஏ.டப்.எம.ஏ. அனுராத திலகரத்ன | உதவிப் பணிப்பாளர் | Fiscal Management Efficiency Project - Capacity Building Program on ITMIS | 26 பெப்ரவரி 2013 |
| திருமதி.எம்.ஏ.என் ஸீ. பெரேரா | உதவிப் பணிப்பாளர் | PRAG Institute - VAT & SVAT | 19 யூலை 2013 |
| திருமதி. எச்.எப்.பீ.பொண்சேகா | நிருவாக உத்தியோகத்தர் | NILS -Disciplinary Training Program | 22-24 ஏப்ரல் 2013 |
| திருமதி. ஸீ.கே.விதாண | அபிவிருத்தி உதவியாளர் | Certificate Course in English for Employment Purposes (CEEP) - 2013 | 2013 மே 12 முதல் இரண்டரை மாதங்கள் |
| திருமதி. டப்.எம்.எம்.பீ பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் | SLIDA - Certificate Course in English for Employment Purposes (CEEP) - 2013 | 2013 மே 12 முதல் இரண்டரை மாதங்கள் |

| | | | |
|---|---|---|---|
| திருமதி.டி.பீ. ஆரியதிலக | அரச முகாமைத்துவ உதவியாளர் | SLIDA - Certificate Course in English for Employment Purposes (CEEP) - 2013 | 2013 மே 12 முதல் இரண்டரை மாதங்கள் |
| திருமதி.எஸ்.டப். எஸ்.என். திலன்திகா | அரச முகாமைத்துவ உதவியாளர் | SLIDA - Certificate Course in English for Employment Purposes (CEEP) - 2013 | 2013 மே 12 முதல் இரண்டரை மாதங்கள் |
| | | SDFL - Office Management & Office Procedures | 26- 27 நொவெம்பர் 2013 |
| திருமதி. ஏ.டீ.உடகஹபத்துவ | அரச முகாமைத்துவ உதவியாளர் | SDFL - Office Management | 25- 26 யூன் 2013 |
| | | SDFL - Office Management & Office Procedures | 26- 27 நொவெம்பர் 2013 |
| திருமதி. என்.ஏ.சுவர்ணலதா | அரச முகாமைத்துவ உதவியாளர் | Department of State Accounts - Public Sector Accounting Software | 24 யூன் 2013 |
| திருமதி. டப்.என்.டீ.சில்வா | அரச முகாமைத்துவ உதவியாளர் | SDFL - Annual Stock Verification and Disposal Procedures | 12 – 13 ஓகத்து 2013 |
| | | SDFL - Office Management & Office Procedures | 26- 27 நொவெம்பர் 2013 |
| திருமதி. ஸீ.வை.ரணசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் | SLIDA - Certificate Course in English for Employment Purposes (CEEP) - 2013 | 2013 மே 12 முதல் இரண்டரை மாதங்கள் |

### 3.2.2 வெளிநாட்டுப் பயிற்சிகள்/ பற்றரைகள்

| **பெயர்** | **பதவி** | **நிகழ்ச்சித் திட்டம் & நாடு** | **பயிற்சிக் காலம்** |
|---|---|---|---|
| திரு. கே.எம்.மஹிந்த சிறிவர்தன | பணிப்பாளர் நாயகம் | IMF - IMF/WB Spring Meetings in Washington DC, USA | 16 மே – 23 ஏப்ரல் 2013 |
| | | SAARC Finance Group Meeting & Governors' Symposium, Islamabad, Pakistan | 17 – 19 ஜூன் 2013 |
| | | National University of Singapore - Training Program on E-Governance and Change Management for Senior Level | 17 – 25 ஓகத்து 2013 |
| செல்வி. டீ.ஜீ.டப். குணதிலக | வரி ஆலோசகர் | Kuala Lumpur, Malaysia - IRBM - OECD Tax Policy Analysis | 18 – 22 பெ்ரவரி 2013 |
| | | National University of Singapore - Training Program on E-Governance and Change Management for Senior Level | 20 – 28 ஏப்ரல் 2013 |

| | | | |
|---|---|---|---|
| செல்வி. கே.ஏ.ரம்யா காந்தி | பணிப்பாளர் | National University of Singapore - Executive Training Program | 01 – 05 யூலை 2013 |
| | | USA Treasury Department - International Visitor Leadership Program in USA on "Taxation : granting funds" | 09 – 13 செத்தெம்பர் 2013 |
| திரு. எச்.எஸ்.எஸ். குமார | பிரதிப் பணிப்பாளர் | IMF, Singapore Center - Macroeconomic Diagnostic | 03 – 15 மார்ச் 2013 |
| | | ADB HQ in Manila, Philippines - An International Forum on Skills for Inclusive and Sustainable Growth in Developing Asia Pacific | 09 – 13 திசெம்பர் 2013 |
| திரு ஏம்.கே.சீ. சேனாநாயக | உதவிப் பணிப்பாளர் | Ph.D. Programme in Economics at the University of New South Wales - Australia | 2011 முதல் 2014 திசெம்பர் 04 வரை |
| திரு. எஸ்.பீ.கிரிவத்துடு வகே | உதவிப் பணிப்பாளர் | Asian Development Bank - 46th Annual Meeting of the Board of Government - Delhi, India | 02 – 05 மே 2013 |
| | | National University of Singapore - Executive Training Program | 01 – 05 யூலை 2013 |
| திரு. ஏ.டபி.எம்.ஏ. அனுராதா திலகரத்ன | உதவிப் பணிப்பாளர் | IMF - Forth High Level Tax Conference for Asian Countries in Tokyo, Japan | 02 – 04 ஏப்ரல் 2013 |
| | | National University of Singapore - Executive Training Program | 01 – 05 யூலை 2013 |
| | | Minsk, Belarus - Proposed Negotiations on the draft Agreement for Avoidance of Double Taxation and Prevention of Fiscal Evasion | 05 – 09 ஓகத்து 2013 |
| | | Singapore - Negotiations on Avoidance & Double Taxation | 21 – 25 ஒற்றோபர் 2013 |
| திருமதி.எம்.ஏ.என் ஸீ. பெரேரா | உதவிப் பணிப்பாளர் | JDS, Japan - Macro Economics and Development Economics | 22 ஓகத்து 2013 – ஒற்றோபர் 2015 |
| செல்வி. எச்.டீ.ஏ.றுக்ஷிணி | உதவிப் பணிப்பாளர் | KOICA - Korea - Knowledge Sharing Program (KSP) of Korea Interim Report Workshop | 14 – 20 ஜனவரி 2013 |
| | | Warsaw, Poland - Negotiation for the revision of the Agreement on the Avoidance of Double Taxation and the Prevention of Fiscal Evasion | 30 நொவம்பர் - 08 திசெம்பர் 2013 |

## 3.3. நிதி நிருவாகம்

2013 ஆம் ஆண்டில் தலைப்பு இல. 238, நிகழ்ச்சித் திட்டம் 1, கருத்திட்டம் 1 இன் கீழ் இத்திணைக்களத்திற்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டினால் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன், அவ் ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**(i) 2013 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திய விதம்**

| செலவு விபரம் | 2013 மதிப்பீடு ரூபா | 2013 தேறிய ஒதுக்கீடுகள் ரூபா | 2013 மெயச் செலவு ரூபா |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | **98,625,000** | **97,425,000** | **68,356,153.58** |
| ஆள்சார் படிகள் | 25,600,000 | 26,250,000 | 20,764,926.17 |
| பிரயாணச் செலவுகள் | 1,100,000 | 3,300,000 | 3,266,465.81 |
| வழங்கல்கள் | 2,475,000 | 2,475,000 | 1,806,287.05 |
| பராமரிப்புச் செலவுகள் | 2,400,000 | 2,430,000 | 1,791,829.14 |
| ஒப்பந்த சேவைகள் | 66,700,000 | 62,620,000 | 40,400,979.28 |
| மாற்றல்கள் | 350,000 | 350,000 | 325,666.13 |
| **மூலதனச் செலவு** | **900,000** | **2,100,000** | **1,855,424.76** |
| புனரமைப்பும் மேம்படுத்தலும் | 100,000 | 200,000 | 127,395.00 |
| பற்றுக்கள் | 500,000 | 1,500,000 | 1,360,029.76 |
| மூலதன மாற்றல்கள் | - | - | - |
| ஆற்றல் விருத்தி | 300,000 | 400,000 | 368,000.00 |
| **முழு மொத்தம்** | **99,525,000** | **99,525,000** | **70,211,578.34** |

**(ii) அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்கு**

2013 ஆம் ஆண்டுக்காக இத்திணைக்களத்தின் அரச உத்தியோகத்தர்களின் 'பி' கணக்கின் விபரங்கள் கீழ்க்காணுமாறு அமையும்:

| விபரம் | அனுமதித்த எல்லை ரூபா | உள்ளபடியான எல்லை ரூபா |
|---|---|---|
| 1. ஆகக் கூடுதலான செலவின எல்லை | 3,000,000.00 | 1,222,471.00 |
| 2. ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை | 1,000,000.00 | 1,169,046.11 |
| 3. ஆகக் கூடுதலான வரவு மீதி எல்லை | 10,000,000.00 | 6,270,720.99 |

**(iii). கணக்காய்வு விசாரணை**

2013 ஆம் ஆண்டில் நிதி, திட்டமிடல் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால், 04 கணக்காய்வு ஐய வினாக்களும், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தினால் 03 கணக்காய்வு ஐய வினாக்களும் கிடைக்கப் பெற்ற கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அவற்றிற்கும் பதிலளிக்கப்பட்டும் உள்ளன.